சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.110/2018**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.5** இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இந்துமதி | தொழில் | இல்லத்தரசி |
| கணவர் பெயர் | வெங்கட்ராமன் | ஜாதி | |
| கிராமம் | கண்ணமங்கலம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 39 |

**12.09.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு 5ம் சாட்சி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வாதி, பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் பின்புறத்தில் உள்ள மேடோவர் எழுதப்பட்ட பக்கத்தில் நான் எழுதிக்கொடுத்த மேடோவர் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.